**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S.798/2009**

**Date :26.03.2026**

**பி. வா.சா1- பால்நாடார்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

ரீசர்வே எண் 331 மற்றும் அதன் உட்பிரிவுகள் அமலுக்கு வந்த பின்னர் 331/11 ஏதேனும் ஆவணம் மூலமாக கிரையம் அல்லது ஆவணம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். சர்வே எண் 331/13 க்கு வடக்கு பக்கம் விஜயராகவன் மகள் வகையரா சொத்து என்று எல்கை குறிப்பிட்டு அன்னக்கிளியிடமிருந்து 2010 ம் ஆண்டு செட்டில்மென்டாக வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விஜயராகவன் வகையரா சொத்து சர்வே எண் 331/12 க்கு உட்பட்டது என்றால் சரிதான். மேற்படி அன்னக்கிளியை தவிர வேறு எந்த நபர்களுக்கும் சர்வே எண் 331/13 ல் உரிமை இருந்தது என்றால் பால்நாடார் மற்றும் பொன்னுசாமி. மேற்படி அன்னக்கிளியை தவிர எனது மற்ற சகோதரிகளின் பெயர் என்ன என்றால் தங்கம்மாள் பாக்கியலெட்சுமி. மேற்படி தங்கம்மாள் மற்றும் பாக்கியலெட்சுமி எவ்வித ஆவணம் எழுதி தரவில்லை என்றால் சரிதான்.

செல்லத்துரை என்பவரும் சொத்தினை குறித்து எனக்கோ எனது சகோதரருக்கோ எவ்வித ஆவணம் எழுதி தரவில்லை என்றால் சரிதான். சிதம்பர நாடார் பிள்ளைகளுக்கு சொத்தில் உரிமை இருந்ததா என்றால் சர்வே எண் 331/14 மற்றும் 16 ல் உரிமை இருந்தது. சர்வே எண் 331/14 உள்ள சொத்து சர்வே எண் 331/13 க்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 331/14 உள்ள சொத்து சர்வே எண் 331/12 க்கு தெற்கு பக்கம் கிழக்கு பாதியில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிதம்பர நாடார் சொத்தை யார் அனுபவித்து வருகிறார் என்றால் அவரது மகன் சிவசங்கரன்.

சர்வே எண் 331/12 மற்றும் 15 க்கு இடையில் ஒரு வாகை மரம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 331/15 சொத்து சர்வே எண் 331/16 க்கும் கிழக்கே உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிருரை மற்றும் பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு எந்தெந்த நபர்கள் எந்தெந்த சொத்தை அனுபவித்து வருகிறோம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிருரையில் 1ம் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்தின் அடுத்த சொத்தினை தனித்த உரிமையாளராக அனுபவித்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆகையால் நான் எனக்கு சாதகமாக ஆதயம் கிடைக்கும் வகையில் பொய்யான தகவலை தெரிவித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2010ம் ஆண்டு ரீ சர்வே 331 உட்பிரிவு செய்யப்பட்டது குறித்த அனைத்து விவரங்களும் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். 2010ற்கு பின்னரும் உட்பிரிவு செய்யப்பட்டதும் பரப்பளவில் வித்தியாசம் உள்ளது என்று 16 ஆண்டுகள் வரையிலும் மனுவோ வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு தாக்கல் செய்துள்ளேன். எனது எதிருரையில் மேற்படி மனு தாக்கல் செய்தது குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தேவையில்லாததால் குறிப்பிடப்படவில்லை . மேற்படி மனு எந்த அலுவலகத்தில் எந்த அதிகார அமைப்பின் முன் கொடுத்தேன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் தற்போதும் மேற்படி மனு குறித்தோ அதன் விவரம் குறித்தோ நீதிமன்றத்தில் கூற இயலாது என்றால் சரியல்ல. 03.01.2022 அன்று வருவாய் கோட்டாட்சியர் நாகர்கோவில் முன்பாக மனு சமர்பித்துள்ளேன். மேற்படி மனுவினை தாக்கல் செய்யலாம்.

மேற்படி மனுவின் எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி மனு என்னால்

கொடுக்கப்பட்டதன் பெயரில் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக மனு கொடுக்கப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தொடர்பாக நான் எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை எவ்வித ஆவணங்களும் எனது கைவசத்தில் இல்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் இருப்பதாக நான் எதிருரையிலோ பிராமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் என்றால் சரிதான். **மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ 1 மற்றும் நீ.ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி நீ.ம.சா.ஆ 1 மற்றும் நீ.ம.சா.ஆ 2 சர்வே எண் 331/12 ன் விஸ்திரணம் 100. 984 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நீ.ம.சாஆ 2 ல் ஆ பதிவேட்டின் படிசர்வே எண் 331/12 ன் விஸ்திரணம் 112.385 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ 2 ல் இருவேறு விஸ்திரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எனது இடத்திற்கும் வாதியின் இடத்திற்கும் நடுவே உள்ள பிரச்சனைக்குரிய இடத்தின் எல்கையை நிர்ணயம் செய்வதற்கு எனது இடத்தை அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான். 112 சென்ட்டில் எந்தெந்த சொத்து யார் யார் கைவசம் உள்ளது என்ற விவரம் நீ.ம.சா.ஆ 1 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 10 ல் 220 லிங்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது 44.2 மீட்டர் என்றால் சரிதான். மேற்படி 220 லிங்ஸ் வாதியின் சொத்திற்கு மேற்கு பக்க தென் வடல் நீளம் என்றால் சரிதான். வாசாஆ 10 ல் வாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் 111 லிங்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது 22.4 மீட்டர் என்றால்

சரிதான்.

வாசாஆ 10 ற்கும் நீ.ம.சா.ஆ 2 ற்கும் கிழக்கும் மேற்கு பக்கமும் உள்ள தென்வடல் நீளத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லை என்றால் சரிதான். FMB அடிப்படையில் சர்வே எண் 331/12 ல் தெற்கு எல்கையில் வரையரை செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 331/13,14 ,15 ல் எனது மற்றும் எனது குடும்பத்தாரிடம் மொத்தம் இருக்கும் சொத்தின் விஸ்திரணம் என்ன என்றால் 34 ஏர். வாசாஆ 10 ல் தெற்கு பக்கம் 475 லிங்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது 95.6 மீ என்றால் சரிதான். வாசாஆ 10 ல் வடக்கு பக்கம் மேற்கு பகுதியில் நீளம் 289 லிங்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது 53.6 மீ என்றால் கணக்கீட்டு சொல்ல வேண்டும். மேற்படி வடக்கு பக்கத்தில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.

வாசாஆ 10 ன் அடிப்படையில் வாதியின் சொத்தினை நிர்ணயம் செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**